1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **அபிப்பிராயம்**

இலங்கை முதலீட்டுச் சபையின் (“சபை”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1)ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின்

புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபை அங்கீகரித்த தொழில் முயற்சிகளிடமிருந்து 2022 திசெம்பரில் 31 பெறவேண்டியவைகள் ரூபா 873,876,132 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 143,523,834 அல்லது 16 சதவீதம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் மீதமாகவிருந்தது. காலக்கழிவிற்கான ஏற்பாடு ரூபா 359,321,925 ஆக இருந்ததுடன் இது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய மொத்த தொகையின் 41 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. | 05 வருடங்களுக்கு மேலான ஆகக்கூடிய பங்கு நிறுத்தப்பட்ட அல்லது கைவிடப்பட்ட செயற்திட்டங்களிலிருந்தாகும். | பேறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 169,242,658 தொகையான ஏனைய வருமதிகளில் ரூபா 164,144,352 அல்லது 97 சதவீதம் 05 வருடங்களுக்கு மேலாக நிலுவையாகவிருந்தது. | முறையான அனுமதியுடன் அறவிடுவதற்கு அல்லது இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி - |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லன்வா சன்ஸ்தா சீமெந்து | முதலீட்டுச் சபையானது சட்ட அபிப்பிராயத்தைப் பெற்றிருந்ததுடன் | -மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்திடத்திடமிருந்து (தனியார்) பெறவேண்டிய தொகை ரூபா 152,842,821 தொகையாகவிருந்ததுடன் இது செலுத்தப்படாது 2019 இலிருந்து பல வருடங்களாகவிருந்தது. | விடயங்களைத் தீர்ப்பதற்கு கூட்டுத்தாபனத்துடன் சில கூட்டங்கள் நடைபெற்றதுடன் தற்போது முகாமைத்துவம் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக சட்டநடவடிக்கையை எடுப்பதற்கு தீர்மானிக்கின்றது. | |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வருடாந்தக் கட்டணத்திலிருந்து 90 சதவீதமான ரூபா 227,360,269 காலக்கழிவிற்கான ஏற்பாடாக மேற்கொண்டிருந்தது. மேலும், அந்த 92 சதவீதத்தில், 90 சதவீதமான ஏற்பாடு ரூபா 24,706,100 தொகையான மூலதன நட்டத்திற்கான மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கவனம் செலுத்தப்பட்டது. | -மேற்படி -- |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 371 இன் 05 மற்றும் 02 (ஆ) ஆம் உப பிரிவுகள் | கட்டுநாயக்கா ஏற்றுமதி செயன்முறை வலயம் மற்றும் சீதாவக்க ஏற்றுமதி செயன்முறை வலயத்திற்கு கொடுப்பனவு மேற்கொண்ட பின்னர் செலவழிக்கப்படாத முற்பணத்தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும், எல்லையை விஞ்சி உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | இந்த விடயத்தில் முன்னேற்றத்தின் தேவைப்பாட்டினை இனங்காணும் போது சபையானது அறிவுறுத்தல்களை வழங்கியது. நாங்கள் முற்பணத் தீர்ப்பனவுகளின் தாமதங்களை குறைப்பதற்கு நாங்கள் மேலதிக நடவடிக்கைகளை எதிர்காலத்தில் தொடங்குவோம். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய பெறுகை வழிகாட்டிகள் - 2006 | சீதாவாக்கை ஏற்றுமதி செயன்முறை வலயத்திலுள்ள பணியாளர் வதிவிடத்திற்கு செல்லுகின்ற வீதி நிர்மாணமானது அரச | மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றிற்கு (தொழில்முயற்சிகளிலிருந்து 02 பொறியிலாளர்கள் | அரச பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெறுகை வழிகாட்டியின் 3.2.1, 8.9.1(அ), 8.9.3, 4.3.1, மற்றும் 5.1.1(அ) ஆம் வழிகாட்டிகளிற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மற்றும் பொறியியலாளர் - வலயம்) இவ்வேலை வழங்கப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்காக அரச நிதிகள் பயன்படுத்தப்படாமையால் குழுவானது தேசிய போட்டி விலைமனுச் செய்முறையை பின்பற்றியிருக்கவில்லை. | |
| (இ) | 2016 ஏப்ரல் 25 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க மற்றும் 2016 ஒக்தோபர் 22 ஆந் திகதிய 02/2016(01) ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைச் சுற்றறிக்கை. | நிறைவேற்று இயக்குனர்கள் மற்றும் சிரேஸ்ட நிறைவேற்று இயக்குனர்கள் போன்றோர்களின் அனுமதியளிக்கப்பட்ட சம்பளக் குறியீடு எச்எம் 2-1 மற்றும் எச்எம் 1-1 ஆக இருந்தபோதும் சபையானது உரிய உத்தியோகத்தர்களின் சம்பளக்குறியீட்டினை எச்எம் 2-2 மற்றும் எச்எம் 1-2 ஆக பேணியிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் சிரேஸ்ட பிரதம பணியாளர்கள் மற்றும் பிரதம பணிப்பாளர்களிற்கு சரியான சம்பளக் குறியீட்டினை போடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | | | |
| I. | கூட்டு ஆட்சி மீதான வழிகாட்டிகள் மற்றும் அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளிற்கான (எஸ்ஓஈ) வழிகாட்டிகள். | | | |
| i. | பிரிவு 2.6 | நிறைவேற்றுப் பணிப்பாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம் இயக்குனர் | திறைசேரியின் செயலாளரால் விநியோகிக்கப்பட்ட 2022.04.26 ஆந் | பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சபையின் செயலாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். | திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீடு விநியோகித்தமையால் சபைச் செயலாளரின் இயலுமையிலுள்ள நிறைவேற்று இயக்குனர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்) போன்றோரை நியமிப்பதற்கு 04.05.2022 இல் இடம்பெற்ற இயக்குனர் சபை கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். |
| ii. | பிரிவு 3.1 | கடந்த 05 வருடங்களிற்குரிய வருடாந்த அறிக்கைகளை இணையத்தளம் கொண்டிருக்க வேண்டிய போதிலும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கைகள் 2023 யூலை 31 இலேயே இணையத்தளத்திற்கு விடப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான அறிக்கை விரைவில் இணையத்தளத்திற்கு விடப்படும். | -மேற்படி -- |
| II. | அரச உடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகளின் செயற்பாட்டுக் கையேடு | | | |
| | பிரிவு 3.1 மற்றும் 3.2 | சபையானது பொது திறைசேரியின் அனுமதி இல்லாமல் மீளாய்வாண்டிற்காக ரூபா 544,263,823 மற்றும் ரூபா 68,039,960 மிகையூதியங்களை செலுத்தியிருந்தது. | திறைசேரியின் அனுமதி 2021.12.02 இலேயே கோரப்பட்டிருந்தது. | -மேற்படி -- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,921,657,387 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,363,405,054 ஆகும். ஆகவே நிதி விளைவுகளில் ரூபா 1,558,252,333 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. வருமானம் மற்றும் நிதி வருமானம் முறையே ரூபா 1,062,045,353 மற்றும் ரூபா 1,075,572,421 ஆல் முறையே அதிகரித்தமை இதற்கு காரணங்களாகவிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையீன்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சட்டத்திலுள்ள பிரமாணத்தின் பிரகாரம் சூழல் பாதுகாப்பு உத்தரவாதமானது மீள்புதுப்பிக்க வேண்டியபோதும் மீள்புதுப்பிக்க வேண்டிய அனுமதிப்படிவம் உத்தரவாதம் காலாவதியாகும் திகதியிலிருந்து 03 மாதங்களுக்கு முதல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், இலங்கை முதலீட்டுச் சபை நடவடிக்கையை பின்தொடருவதற்கு தவறியிருந்தது. ஆகையால், சீதாவாக்கை ஏற்றுமதி செயன்முறை வலயத்திலுள்ள 06 தொழில்முயற்சிகள் மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்க தவறியிருந்தது. | இணங்கப்படுவதோடு நடவடிக்கை எடுக்கப்படும். | சூழல் பாதுகாப்பு உத்தரவாதம் புதுப்பித்தல் செய்முறை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | சீதாவாக்கை ஏற்றுமதி செய்முறை வலயத்திலுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குரிய சம்பள விகிதம் அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் முதலீட்டுச் சபையானது சரியான நலன்கள் கொடுக்கப்பட்டதா என்பதை மேற்பார்வை செய்ய தவறியிருந்தது. ஆகையால், சீதாவாக்கை ஏற்றுமதி வலயத்திலுள்ள 06 அலுவலர்களுக்கு 2022 மார்ச் மற்றும் நவம்பர் மாதங்களிற்கான அதிகுறைந்த சம்பள தேவைப்பாடுகளுக்கு குறைவாக சம்பளத்தினை பெற்றிருந்தனர். மேலும், தனியார் பாதுகாப்பு | அதிகுறைந்த சம்பள விகிதத்தினை பேணுவதற்கு தனியார் பாதகாப்பு நிறுவனத்திற்கு அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை முதலீட்டுச் சபை அதனை மேற்பார்வை செய்யும். மேலும், முதலீட்ச் சபைக்கு பற்றுச்சீட்டுக்களை அனுப்புவதற்கு முதல் ஈபீஎப் மற்றும் ஈரீஎப் இனை அனுப்புவதற்கு பாதுகாப்பு நிறுவனத்திற்கு அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டிருந்தது. | முதலீட்டுச் சபை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தொடர்பில் சம்பளக் கொடுப்பனவு மற்றும் பீஎப் மற்றும் ஈரீஎப் இனை மேற்பார்வை செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்தால் 2022 திசெம்பர் மாதத்திற்கான ஈரீஎப் மற்றும் ஈபீஎப் தொடர்பல் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றில் 05 பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ ) | செப்ஸ் பாதுகாப்பு நிறுவனமானது 2022 யூலை, ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் தெரிவு செய்யப்பட்ட மாதங்களிற்காக பாதுகாப்பு உடன்படிக்கையின் 03 ஆம் உறுப்புரிமையின் பிரகாரம் தேவையான பாதுகாப்பு உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்துவதற்கு தவறியிருந்தது. மேலும், 12 மணித்தியாலங்கள் சிப்ட்கள் வழங்கப்பட வேண்டியபோதும் பற்றுச்சீட்டுக்களின் பிரகாரம் 24 இற்கு மேலதிகமான சிப்ட்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. இது வலயத்தின் பாதுகாப்பை பாதகமாக பாதிக்கும்.. | பாதுகாப்பு நிறுவனமானது 24 மணித்தியாலங்களிற்கு மேலதிகமாக தனியாரை வேலைக்கமர்த்துவதை தடுப்பதற்கு பல தடவைகள் அறிவித்திருந்ததுடன் அத்தகைள நிலைமைகளை குறைப்பதற்கு தண்டப்பணம் அறவிடப்பட்டிருந்தது. | வலயத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறமையீன்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 2,460 மில்லியன் மதிப்பிடப்பட்ட முதலீட்டுடன் 400 ஏக்கர்களுக்கு மேலாக பரந்துள்ள அரபோக்காவிலுள்ள மருந்து உற்பத்தி வலயத்தினை அமைப்பதற்கு சபையானது 2020 ஆம் ஆண்டில் திட்டமிட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| i. | இந்தச் செயற்திட்டத்திற்கு காணி மானியமாக கிடைக்கப்பெற்றமையால் சாத்தியவளக் கற்கைகைய மேற்கொள்ளாமல் தந்திரோபாய சூழல் மதிப்பீடு அறிக்கையினை மாத்திரம் நடாத்துவதன் மூலம் செயற்திட்டத்திற்கு இந்தக் காணி பயன்படுத்தப்பட்டிருந்தது. | புதிய மருந்து வலயத்தினை தாபிப்பதற்காக உருவாக்கப்பட்ட குழுவிற்கு கொடுக்கப்பட்ட அறிவுத்தல்களின் பிரகாரம், கம்பாந்தோட்டை பிரதேசத்தில் விசேட மருந்துச் செய்முறை வலயத்தினை | முதலீட்டுச் செயற்திட்டமொன்றை தொடங்குவதற்கு முன்னர் சாத்தியவளக் கற்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | |
| ii. | 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் கட்டமைப்பின் ஏற்பாடானது பூர்த்திசெய்யப்பட வேண்டியதுடன் 2022 ஒக்தோபர் அளவில் மின்சார வசதிகளின் ஏற்பாடானது 70 சதவீதமாகவும் நீர் வசதிகளின் ஏற்பாடானது 0 சதவீதமாகவும் இருந்ததுடன் நெடுஞ்சாலை வசதிகளிற்கான ஏற்பாடானது மிகவும் மெதுவாகவிருந்தது. | 2021/2022 ஆம் ஆண்டின்போதான கொவிட்-19 பரம்பல் மற்றும் பொருளாதார மந்தம் மற்றும் அரச செலவுகளை கட்டுப்படுத்துவதற்கான அரச கொள்கைகள் போன்ற காரணங்களால் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட பிரேரணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| iii. | ரூபா 2,460 மில்லியன் ஒட்டுமொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்திலான செயற்திட்டத்தில் 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் உரிய வேலையின் 68 சதவீதமான ரூபா 1,680 மில்லியன் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் நாட்டில் நிலவிய பொருளாதாரப் பிரச்சனையால் 2022 ஒக்தோபர் அளவில் 10.16 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 275.15 மில்லியன் இந்த நோக்கத்திற்காக செலுத்தப்பட்டிருந்தது. | 2020-2021-2022 மற்றும் 2023 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியின் போது நாடானது கொவிட் மற்றும்சில பொருளாதார பின்னடையவால் பாதிப்படைந்ததுடன் ஆல் பாதிப்படைந்ததுடன் முதலீட்டாளர்களிற்கு சாதகமான சூலச் காரணிகள் விருத்தியடையாததுடன் கட்டமைப்பிற்கான பணம் அரசங்கத்தால் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட பிரேரணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| iv. | பிரதேசத்தில் முதலீட்டுச் சபை முதலீட்டாளர்களை கவருவதற்கு ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடாத்தி அதில் சில முதலீட்டாளர்கள் பங்குபற்றியிருந்த போதிலும் எந்தவொரு முதலீட்டாளரும் முதலிடுவதற்கு முன்வரவில்லை. | தற்போதுள்ள உலக நெருக்கடி பிரச்சனை காரணமாக முதலீட்டாளர்களை கவருதல் பின்தங்கிய நிலையிலுள்ளது. எதிர்காலத்தில் உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் முதலீட்டாளர்களை கவருவதில் பல வினைத்திறனான செயன்முன்னேற்றம் என நாம் நம்புகின்றோம். | முதலீட்டாளர்களை கவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 4,770 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஏறாவூரிலுள்ள 400 ஏக்கர் காணியில் ஆடைகளுக்கான விசேட கைத்தொழில் வலயத்தினை அமைப்பதற்கு திட்டமிடப்பட்ட கைத்தொழில் வலயம் | | |

தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| i. | காணி சுவீகரிப்பிற்கான தீர்மானங்களை எடுப்பதில் ஏற்பட்ட காலதாமதங்களால் இந்த வலயத்தின் நிர்மாணத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணிக்காக ரூபா 107,890,674 மேலதிக தொகையை செலவழிக்கவேண்டியுள்ளது. | காணி சுவீகரிப்பு செய்முறையினை நிறுத்துவதற்கு எடுத்த அரசாங்க கொள்கை தீர்மானத்தால் சுவீகரிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. | செயற்திட்ட பிரேரணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii. | கடல் வெளியேற்ற முறைமையானது தொடங்கப்பட்டிருந்த போதும் 100 ஏக்கர் அண்ணளவான காணியின் உரிமையானது முதலீட்டுச் சபைக்கு 2022 நவம்பர் 30 அளவிலும் மாற்றப்பட்டிருக்கவில்லை. இந்தக் காணியானது இலங்கை அரசாங்கம் மற்றும் அதனுடன் தொடர்புடையவற்றிற்குச் சொந்தமானவையாகும். இலங்கை முதலீட்டுச் சபையானது 2022 ஒக்தோபர் மாதமளவில் அளவை வேலைக்காக ரூபா 927,738 செலவினை ஏற்படுத்தியது. | மட்டக்களப்பு பிரதேச செயலகத்தின் ஒன்றிணைப்புடன் காணியை மாற்றும் செய்முறை தற்போது நடைபெற்று வருகின்றது. | காணியை மாற்றும் செய்முறை துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| iii. | செயற்திட்டத்தின் வேலை முதலீட்டை கவருவதற்காக 2023 சனவரி அளவில் தகுந்த மட்டத்தில் பூர்த்திசெய்யப்பட வேண்டியபோதும் 2022 நவம்பர் அளவில் இது அத்தகைய நிலைமை மட்டத்திற்கு முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 இல் ஏற்பட்ட கொவிட் நிலைமையால் மற்றும் நிதி அமைச்சால் விநியோகிக்கப்பட்ட 2022.04.26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு இணங்க பொதுச்செலவீனங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் உள்ளக நிதியங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களின் அமுலாக்கலின் தற்காலிக இடைநிறுத்தலினாலும் 2020 மார்ச் மற்றும் 2021 இல் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டது. | செயற்திட்ட பிரேரணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| iv. | 2020, 2021 மற்றும் 2022 இல் பிரதேசத்திற்கு முதலீட்டை கவர்ந்திழுப்பதற்கு முதலீட்டுச் சபையானது மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்கியிருந்த போதும் இதுவரை ஒரேயொரு முதலீட்டாளர் மாத்திரம் முதலிடுவதற்கு முன்வந்தனர். | தற்போதைய உலகளாவிய நெருக்கடி நிலைமையால் முதலீட்டாளர்களை கவருதல் பின்னடைவிலுள்ளது. எதிர்காலத்தில் பிராந்தியத்தில் | முதலீட்டாளர்களை கவர்ந்திழுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

<table>
<tr><td></td><td></td><td>உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதுடன் முதலீட்டாளர்களை கவர்ந்திழுப்பதில் வினைத்திறனான செய்முறை இருக்குமென நம்புகின்றோம்.</td><td></td></tr>
<tr><td>v.</td><td>அடிப்படை நீர் வசதிகளை வழங்கும் செயற்திட்டத்திற்காக இலங்கை முதலீட்டுச் சபை எந்தவொரு உடன்படிக்கை மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை இல்லாமல் ரூபா 24.019 மில்லியனை செலுத்தியிருந்தது.</td><td>அரச நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட பணமானது உட்கட்டமைப்பிற்கான ஆலோசனை சேவைகள், வடிவமைப்பு வேலைகள் மற்றும் சில சேவைகள் போன்றவற்றிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. எந்தவொரு பின்வாங்கல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.</td><td>உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட வேண்டும்.</td></tr>
<tr><td>vi.</td><td>2022 நவம்பர் 30 அளவில் அடிப்படை நீர் வசதிகளின் வேலைகளிற்காக 2020,2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிற்காக ரூபா 16.1 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தபோதும் ரூபா 24 மில்லியன் அதற்காக செலவழிக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட செலீனங்களை மீறி 2022 ஆம் ஆண்டளவில் ரூபா 7.9 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது.</td><td>இணங்கப்பட்டதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது</td><td>குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டினுள் கிரயம் ஏற்படுத்தப்பட வேண்டும்.</td></tr>
<tr><td>(இ)</td><td>புதிய முதலீடுகளை மேற்கொள்வதற்கு எந்தவொரு செயற்திட்டங்களும் அடையப்பட வேண்டிய இலக்குகளை நோக்கி துாரளவில் நகரக்கூடிய வகையில் எந்தவொரு செயற்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>விபரங்கள் பின்வருமாறுள்ளது.
<table>
<tr><th>வலயம்</th><th>மதிப்பிடப்பட்ட தொகை ரூபா. மில்</th><th>ஏற்படுத்தப்பட்ட உண்மையான தொகை</th><th>மொத்தக் காணி ஏகர்</th><th>பயன்படுத்தப்பட்ட மொத்தக் காணி ஏக்கர்</th><th>முதலீட்டுச் செயற்திட்டங்களின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>------</td><td>------</td><td>--------</td><td>------</td><td>-------</td><td>-------</td></tr>
<tr><td>மில்லியானா</td><td>13,474</td><td>2,300.5</td><td colspan="3">பரிந்துரைக்கப்பட்ட காணி இதுவரை சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை.</td></tr>
<tr><td>வினிகிறியா</td><td>2,266</td><td>1,052.3</td><td>440.58</td><td>30.72</td><td>3</td></tr>
<tr><td>ஏறாவூர்</td><td>1,750</td><td>361.8</td><td>262</td><td>50</td><td>1</td></tr>
<tr><td>அறாவேகா</td><td>2,460</td><td>275.15</td><td>400</td><td>இல்லை</td><td></td></tr>
</table></td><td>தற்போது ஆரம்பிக்கப்பட்ட பினிகிறியா, ஏறாவூர், அறாவொக்கா வலயங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு 2020-2021-2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு ஆரம்ப காலத்தில் நாட்டில் நிலவிய பொருளாதார பின்னடைவால் பாதிப்படைந்திருந்ததுடன் முதலீட்டாளர்களிற்கான சாதகமான சூழல் நாட்டினுள் அபிவிருத்தி செய்யப்படாததுடன் உட்கட்டமைப்பிற்கான பணம் அரசாங்கத்தால் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இது இந்த கஸ்டமான காலத்தில் பினிகிறி வலயத்தில் 04 முதலீட்டுகளையும் ஏறாவூர் வலயத்தில் 50</td><td>இயலுமான செயற்திட்டங்களிற்காக மேலதிக முதலீட்டாளர்களை கவருவதற்கும் புதிய வலயங்களை மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஏக்கர்களையும் அறாவொக்கா வலயத்தில் 30 ஏக்கர்களையும் தாபிப்பதற்கு இயலுமாகவிருந்தது. | |
| (ஈ) | லக்சுமி வித்தியாலயம் - கட்டுநாயக்காக்கு அருகிலுள்ள 2 ஏக்கர் காணி லக்சுமி வித்தியாலயத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், மேற்கூறப்பட்ட வெளித்தரப்பினருக்கு மாற்றாமலோ அல்லது காணியை குத்தகைக்கு கொடுப்பதற்கு முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடாமலோ கைத்தொழில்துறையற்ற பிரதேசத்தின் கீழ் இந்தக்காணி காட்டப்பட்டிருந்தது. | இந்தக் காணியின் உரிமை முதலீட்டுச் சபையுடன் இருப்பதுடன் தற்போது பாடசாலை மற்றும் பொது மக்கள் இதனை விளையாட்டு மைதானமாக பயன்படுத்தி வரப்படுகின்றது. இலங்கை முதலீட்டுச் சபையின் இயக்குனர் சபையின் அனுமதியுடன் 1995 இல் கொடுக்கப்பட்ட கடப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு கல்வித் திணைக்களத்தினூடாக லக்சுமி வித்தியாலயத்திற்கு உரிமையினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இயக்குனர் சபையின் அனுமதியுடன் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்.**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள்- | சிபாரிசுகள் |
|---|---|---|
| இலங்கை முதலீட்டுச் சபை அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் தாபிக்கப்பட்ட விசேட பிரவிற்கு செலுத்த வேண்டிய சம்பளங்கள் மற்றும் படிகளின் அறவீட்டிற்காக ரூபா 500,000,000 பெறுமதியான திரட்டு நிதிய பங்களிப்பிலிருந்து ரூபா 51,492,525 தொகையொன்றினை கழித்திருந்தது. எனினும், 2022 மே இறுதியளவில் 09 ஆட்சேர்க்கப்பட்ட 08 உத்தியோகத்தர்கள் அவர்களுடைய பதவகளிலிருந்து ஓய்வு பெற்றிருந்ததுடன் 2022 இல் 09 உத்தியோகத்தர்களிற்காக ரூபா | மேலதிகத் தொகையை மீள்நிதியிடுவதற்கு 2023 ஆம ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | திரட்டு நிதியத்திற்குரிய பங்களிப்பிளிலிருந்தான கழிப்பனவுகள் உடனடியாக மீள்நிதியிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 18,793,706 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால், திரட்டு நிதியின் பங்களிப்பாக ரூபா 32,698,819 மீதித் தொகையை மீள்நிதியிடுவதற்கும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முற்பணப் பெறுகையின் கீழும் காட்டுவதற்கு முதலீட்டுச் சபை தவறியிருந்தது. | | |

## 3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13 வலயங்களிலுள்ள 773.09 ஏக்கர் காணி வெற்றிடமாகவிருந்ததுடன் இது முதலீட்டார்களுக்காக கைத்தொழில் பிரதேசத்திலுள்ள 30 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேலும், ஆராவோக்கா( பர்மா வலயம்) மற்றும் 751.7 ஏக்கர் மற்றும் 282.9 ஏக்கர் பிரதேசத்திலுள்ள முறையே பிகிறினியா ஏற்றுமதி வலயக் கட்டம் II அவர்களுடைய தொடக்கத்திலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாதிருந்தது. மேலும், பொருயாதார வலயத்திற்கு வெளிப்புறத்திலுள்ள 777.11 பரப்பளவுள்ள காணி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாதிருந்தது. | முதலீட்டுச் சபையானது முதலீட்டாளர்களிடையே வெற்றிடமாகவுள்ள காணிகளை பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், வெற்றிடமாகவுள்ள காணி விபரங்கள் காணி வங்கியில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இது புதிய தந்திரோபாயமாகவிருப்பதுடன் தற்போதுள்ள முதலீட்டாளர்களால் வலய காணிகளைப் பயன்படுத்தை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடக் காணிகளை பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மிறியாவிலுள்ள ஏற்றுமதி செயன்முறை வலயத்திலுள்ள 10.8 கிலோமீற்றர் உள்ளக வீதியில் 800 மீற்றர்கள் மாத்திரம் ரூபா 516,964,285 கிரயத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 26.5 மீற்றர் தொடக்கம் 33 மீற்றர் வரையிலான வீதியின் நீளமானது ஒட்டுமொத்த 20 மீற்றர் ஒதுக்கத்திலான 7.4 மீற்றர் அகலத்தின் நியமத்தினைவிட உயர்வாகவிருந்தது. | மிறியாவிலுள்ள ஏற்றுமதி செயன்முறை வலயத்திலுள்ள வீதி வலையமைப்பின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நகர அபிவிருத்தி சபையால்(யூடிஏ) ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் யூடிஏ தங்களுடைய பாதுகாப்பில் காணி இருந்தபோது வீதி அபிவிருத்தி சபைக்கு (ஆர்டிஏ)க்கு வழங்கியிருந்தது. 2012 இல் ஆர்டிஏ ஆல் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளுடன் காணி உரிமையாக்கப்பட்டிருந்தது. | வலயங்களிலுள்ள உள்ளக வீதிகள் முறையாக திட்டமிடப்பட வேண்டியதுடன் நிர்மாணிக்கப்பட வேண்டும். |
| (இ) | இடர் முகாமைத்துவ நிலையத்தின் (டீஎம்சீ) பயிற்சி நிலையத்தினை தாபிப்பதற்காக இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்துக்கு ஒதுக்கப்பட்ட கெப்சின் அருகிலுள்ள 5ஏ 3ஆர் 30.1பி உடனான காணியின் துண்டு 2022 ஒக்தோபர் 12 அளவில் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | வழிகளை தெளிவுபடுத்துவதற்கு இரு தரப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் எஸ்எல்ஆர்சீஎஸ் மற்றும் பீஓஜ இன் இரு தரப்பினர்களாலும் பரஸ்பர நன்மைகளை பங்கிடும் வகையில் தகுதியான முதலீட்டாளர்களை இனங்காணப்படுவதற்காகவிருந்தது. | இருக்கின்ற காணிகளை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2006 இன் பெறுகை வழிகாட்டியின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து இணைத்தல் கிரயங்களையும் உள்ளடக்கி மொத்த கிரய மதிப்பீடு பெறுகை நிறுவனத்தால் தயரிக்கப்பட வேண்டியபோதும் மொத்தக் கிரய மதிப்பீடு பெறுகை தயாரிப்பு நடவடிக்கை மற்றும் கட்டுப்பாட்டின் பின்னரான நடவடிக்கைகளின் கிரயங்களை தனித்தனியாக இனங்காண வேண்டியதுடன் மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளுடன் இனங்காணாமையால் உத்தியோகத்தர் சேவையிலுள்ள பெறுகை வழிகாட்டியிலுள்ள ஒவ்வொரு வழிகளின் கிலோமீற்றர் விகிதங்களில் பின்வரும் வேறுபாடுகள் ஏற்பட்டது. | விலை மதிப்பீட்டு நிலைமையில் மதிப்பீடானது ஒவ்வொரு வழிகளிற்காக முன் வழங்கப்பட்ட விலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. எனினும், ஒவ்வொரு வழிகளின் விலையானது காரணிகளுடன் வேறுபடுகின்றது. ஆகையால், கிரய மதிப்பீடு விஞ்ஞான முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருக்க முடியவில்லை. | பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |